https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இமையத்தின் செல்லாத பணம் புதினத்தில் குடும்ப உறவுகள்

**கு. கோபிநாத்,** பதிவு எண்: R20162850
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் மு. இராஜலெட்சுமி**
ஆய்வு நெறியாளர், தமிழ் உயராய்வு மையம்
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்துப்பேட்டை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழில் நவீன இலக்கியம் தனக்கென பல தன்மைகளைக் கொண்டு நூற்றாண்டைத் தாண்டி வெற்றிநடை போடுகிறது. மேலை நாட்டினரின் வரவால் தமிழுக்கு கிடைத்த புதிய இலக்கிய வரவுகளுள் சிறுகதை இலக்கியமும் ஒன்றாகும். இது இலக்கியங்களில் பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றது. அத்தகைய வடிவத்துள் சிறுகதையும் ஒன்றாகும். இத்தகையச் சிறுகதை பலவித பரிமாணங்களை உள்ளடக்கியதாக விளங்குகிறது. கதையினைக் கூறலும் கேட்டலும் வாழ்வின் சுவையான அனுபவங்களாகும். ஆரம்ப காலக்கட்டங்களில் வாய்மொழியாக வழங்கப்பட்ட கதைகளில் பல அறிவியல் வளர்ச்சியால் எழுத்துருப் பெற்றன. தமிழில் கதை கூறும் வழக்கத்தின் தொன்மையினை உணர்த்த, தொல்காப்பியர் குறிப்பிடும் நால்வகை உரைநடை பற்றியும் மேற்கோள் காட்டி அதன் பழமையை அறிஞர்கள் உரைக்கின்றனர். காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதினங்கள் மக்கள் முன் செயல்பட்டு வருகின்றன. புதினப் படைப்பாளரான இமையத்தின் செல்லாத பணம் புதினத்தில் குடும்ப உறவுகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** *சமுதாயம், வறுமை நிலை, கூட்டுக் குடும்பம், ஆணாதிக்கம்*

## முன்னுரை

*சமூக வாழ்வென்பது குடும்பத்திலிருந்தே தொடங்குகிறது. தனிமனிதனின் சமுதாயத்தோடு கொள்ள வேண்டிய உறவிற்குக் குடும்பம் அடித்தளமாக விளங்குகிறது. சமுதாயத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும் குடும்பம் கற்றுத் தருகிறது. எனவே ஒரு சமுதாயத்தின் அச்சாணி என்னும் விழிப்புணர்வை இந்நாவலில் ஆசிரியர் வெளிப்படுத்தியிருப்பதை அறியமுடிகிறது.*

*குடும்பம் என்பது கணவன் மனைவி, குழந்தைகள், தந்தை, தாய் உடன் பிறப்பினர் ஆகியோரை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. இவர்களிடையே ஏற்படும்*

அன்புப்பிணைப்பே குடும்பம் நன்னெறியில் செல்லக் காரணமாகிறது. கணவன் மனைவி, பிள்ளைகள் எனும் கூட்டு முயற்சியே குடும்பமாக உருவெடுக்கிறது. ஆனால் குடும்பத்தில் கணவன் மனைவியை அடிமையாகக் கருதுவதும் மனைவி, கணவனைப் பொருட்படுத்தாமல் இருப்பது ஒருவரையொருவர் குறைகூறிக் கொள்வதும், தேவையில்லாமல் முரண் பட்டுப் பேசுவதும் குழந்தைகளைப் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கு கின்றன.

மண வாழ்வில் பிரியும், மண விலக்கும் இளைய தலைமுறையைப் பெருமளவு பாதிக்கின்றன. எனவே குடும்பம் என்பது போற்றதலுக்கும் வழிபாட்டிற்கும் உரிய ஒன்றாக இருந்தாலும் அதில் ஏற்படும் பிணக்குகள் எத்தகைய உறவுச் சிக்கல் களை உருவாக்குகின்றன. ஒரு சமுதாயத் தின் அடிப்படையாக அமைவது குடும்பம் எனலாம். குடும்பத்தில் இரத்த உறவுகள் மூலம் தனிமனிதன் பெறும் பக்குவமும் பயிற்சியும் பின்னர் அவனது சமூகத் தொடர்புகளில் பெறும் பங்காற்றுகிறது. இந்நிலையில் சமுதாயம் தொடர்பான ஆய்வில் குடும்பம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இத்தகைய குடும்ப வாழ்க்கையை எல்லா மக்களாலும் சிறப்பாக நடத்த முடியாது. மக்களின் வருவாய்க் குறைவை வறுமை எனவும், அவர்தம் வாழ்க்கைக்கு வேண்டிய அவசியப் பொருள்களின் பற்றாக்குறையை வறுமை என்கிறோம். இத்தகைய குடும்பத்தில் வாழ்வியல் நிலைகளை இமையம் தன் செல்லாத பணம் புதினத்தில் எவ்வாறு சித்தரித்துள்ளார் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## குடும்பம்

பண்டைய இந்தியாவில் ஒரு குடும்பம் என்பது பெற்றோர், குழந்தைகள், பேரக் குழந்தைகள், சித்தப்பா, பெரியப்பா, தாய் மாமன், தாயுடன் பிறந்தவர்கள், அவர்களின் மரபில் வந்தவர்கள் தத்து எடுக்கப் பெற்ற குழந்தைகள் ஆகியவர்களைக் கொண்டதாக இருந்தது. செல்வர்களின் குடும்பத்தில் எண்ணற்ற வேலையாட்களும், வீட்டு வேலைகளைச் செய்யும் பணியாட்களும் சுற்றத்தினரும் இருந்தனர். மகளிரை இளமைப் பருவத்திலேயே திருமணம் செய்து கொடுத்தனர். பல மனைவியரை மணந்து கொள்ளும் வழக்கமுடைய சமுதாயம் மிகப்பெரிய குழுவாக அமைகின்றது.

**“சங்க காலத்தில் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா இடம் பெற்ற கூட்டுக் குடும்ப முறை நிலைத்திருக்கவில்லை”[1]** என்பார் கே.கே.பிள்ளை (K.K.Pillai, A social history of Tamils,P.374) காதலித்த தலைவனும் தலைவியும் பெற்றோர் உடன்பாடு இன்றி உடன்போக்காக வெளியே சென்று கணவன் மனைவியாக வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அயலூரில் வாழும் மகளையும் மருமகளையும் செவிலித்தாய் சென்று பார்க்கும் குறிப்புகள் உள்ளன. **“உறவுக்குள்ளே தான் திருமணம் முடிக்க வேண்டும். என்ற மரபு அழுத்தமாக உருவாகாத காலம் அது. எனவே அத்தை, மாமன் மகள் என்பன போன்ற இரத்த உறவுகள் அன்று பெருகியிருக்கவில்லை. இந்த சூழலில் தனிக்குடும்பமே சமுதாயத் தேவையாக அன்று இருந்தது என்பார்”[2]** க.ப.அறவாணன் (க.ப.அறவாணன், தமிழ் இலக்கியச் சமூகவியல்,ப.68)

**“சிலப்பதிகாரத்தில் கண்ணகி தாய், தந்தை முதலியோருடனும் குற்றவேல் மகளிருடன், அடியார்க்கு நல்லாரின் உரையில் அறியலாம்”[3]** (அடியார்க்குநல் லார், சிலப்பதிகாரம் காதை 1.6 84—85) எனவே சிலப்பதிகாரக் காலத்தில் கணவன் மனைவி, கணவனின் பெற்றோர்கள், தோழிமார், குற்றவேல் மகளிர், செவிலித்தாய் ஆகியவர்கள் சேர்ந்த கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பு இருந்ததை அறிய முடிகின்றது.

## குடும்பம் வரையறை

குடும்பம் பற்றிக் குறிப்பிடும் பொழுது பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் குடும்பம் ஒரு நிறுவனம் என்றும், சிலர் அது ஒரு நிலையம் என்றும், ஒரு சிலர் அது ஒரு குழு என்றும் வழங்குகின்றனர். அது எவ்வாறு அழைக்கப் பட்டாலும் மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட பொருள் உடையனவாகும்.

**"நிறுவனம் என்பது செயலைச் சுற்றி அமைந்திருக்கின்ற நெறிகளின் தொகுதி நிலையமோ வேறுபட்ட மனிதர்களை உட்கொண்டிருக்கின்ற ஒரு கூட்டுக் குழு. குழு என்பது அம்மனிதர்களிடயேயான செய்தித் தொடர்பினால் ஏற்படுகின்ற அமைப்பைக் குறிக்கும்"**[4] என்று பாஸ்கல் கில்பர்ட் கூறுகின்றார். (பாஸ்கல் கில்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடு கள்,ப.96)

குடும்பம் என்பது திருமணத்தின் மூலம் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே நிலையான இணைப்பினால் அவிழ்க்க முடியாதபடி பிணைக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. அது அவர்களுடைய உறவுகளை ஒரு குறிப்பிட்ட திடமான வழியில் ஒழுங்குப்படுத்துகின்றது. அந்தப் பிணைப்பு இருவருக்குமிடையே ஒருவித ஈடுபாட்டையும், கவர்ச்சியையும் பொது நல உணர்ச்சியையும் கணவன் மனi்வி என்ற ஆத்மீக இரத்த உறவையுமே முதன்மையாகக் கொள்கின்றது. குடும்பம் ஒரு நிலையம் அல்லது இயைபுக் குழு மட்டுமல்ல அது ஒரு நிறுவனமும் கூட அதை நிறுவனங்களின் தொகுதி என்று சொல்வது கூடத் தவறு என்று கூறியுள்ளார். மேற்குறித்து மூலம் குடும்பம் பற்றிய வரையறைகள் பல்வேறு நிலைகளில் இடம் பெற்றுள்ளன என்பதை அறியப்படுகின்றது.

## ரேவதி தாயின் நிலை

ரேவதி தன்னை காதலிக்கும் ரவி என்ற இளைஞனை வேண்டாம் என்று ரேவதியின் குடும்பமே போராடுகிறது. அவனது சமூகநிலையினை அக்குடும்பம் எடுத்துரைத்து எதிர்ப்பு தெரிவிக்கிறது. அவன் குடும்பம் பர்மாவில் இருந்து வந்தது. அடித்தட்டு வாழ்க்கை வாழும் அவன் ஆட்டோ ஓட்டி பிழைக்கிறான். ஆனால் ரேவதி பிடிவாதமாக இருக்கிறாள். அவள் தன் வாழ்க்கையைப் பற்றி முடிவெடுக்க அவள் கற்ற கல்வி எதுவும் உதவவில்லை. அவளது முடிவை எண்ணி இருதலைக் கொல்லி எறும்பாக தவிக்கின்றாள். ரேவதியின் தாய் தன் தாய்க்கு ரேவதி கொடுக்கின்ற அழுத்தம் பதற்றமடைய வைக்கின்றது. ரவியோடு திருமணம் நடக்கவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன் என்று கூறினாள். இதனை,

**"ரேவதி வேகமாக எழுந்து போனாள். அவள் போன விதம் பயத்தை உண்டாக்கியதால் கீரை உருவிக் கொண்டிருந்ததை அப்படியே போட்டு விட்டுச் சமையலறைக்கு ஓடினாள் அமராவதி. அப்போது தீப்பெட்டியைக் கையில் வைத்துக்கொண்டு கேஸைத் திறந்து விடுவதற்கு ரேவதி தயாராக இருந்தாள். அதைப் பார்த்ததும், போன வேகத்தில் தீப்பெட்டியைப் பிடுங்கி சன்னல் வழியாக வெளியே விட்டெறிந்தாள். உடல் நடுங்க என்னடி காரியம் செய்யுற என்று கேட்டாள். எனக்கு மாப்ள பார்க்கக் கூடாது. இரும்புக் கம்பி மாதிரி விறைப்பாக நின்று கொண்டிருந்தாள். அதுக்காக நீ எதுக்கு சாவப் போற? நீ சாவக் கூடாது ஒன்னெ பெத்தனில்ல அதுக்குகாக நான் சாவுறன் நீ ஒன்னோட எண்ணத்த நெறவேத் திக்க"**[5] என்று ரேவதி தன் தாயிடம் மிரட்டுகிறாள். (இமையம், செல்லாத பணம் ப.10)

ரேவதி அவளுடைய உணர்வுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றாள். அதற்குப் பின்னால் நடக்கவிருக்கும் மிகப் பெரிய துயரத்தை தாய்படுகின்ற வேதனையை என் மகள் அதே அழுத்தத்தை என் மீது திணித்த போது தாயின் மனநிலையில் இருந்து பார்த்த போது உணர்ந்தேன். நியாயமாக கோபப் படுவதற்குக் கூட உரிமை தராத நிலை

ஒவ்வொரு அன்னைக்கும் கொடுமையான காலக்கட்டம் என்று தாய் தன் மகளை நினைத்து வருத்தப்படும் நிலையினைக் காண முடிகிறது.

### முருகன்

ரேவதியின் அண்ணன் முருகன் தன் தங்கை தனக்கு பிடிக்காதவனை திருமணம் செய்துவிட்டாள் என்று அவளிடம் ஆறு வருடங்கள் பேசாமல் இருந்தான். தன் தங்கை நெருப்பினால் எரிந்து தீ காயங்களுடன் மருத்துவ மனையில் இருக்கின்றாள் என்ற செய்தி வந்தவுடன் அவன் மனம் வேதனைப் பட்டது. எப்படியாவது அவளது கணவனை தண்டிக்க வேண்டும் என நினைத்த முருகன் **"ஒருமணி நேரமாவது அந்த நாயப்புடிச்சி உள்ளார வைக்கணும் என்று சொல்லி முருகன் பல்லைக் கடித்தான்"**[6] (இமையம் செல்லாத பணம், ப.67) தன் சுற்றங்களின் சுயபுராணம் அவனையும் முற்றாக சீர்கேட்டு சமுதாய த்தின் உறுப்பினராக மாற்றி உடன் பிறப்பையும் புறக்கணிக்க வைத்தது அவளின் திருமணத்திற்கு பின் பேசுவதை நிறுத்தியவன் அவள் இறந்து கிடக்கும் நிலையில் வருந்தும் ஒரு கதாப்பாத்திரமாக முருகன் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

### நடேசன்

ரேவதியின் தந்தை நடேசன் சமயம் தெரிந்தவர். தேவார திருவாசங்களை ஓதுபவராக இருக்கின்றார். பள்ளியில் தலைமையாசிரியர் சமூகத்தில் உயர்ந்த மதிப்பில் உள்ள அவர் நல்லமுறையில் கோவில் வழிபாடுகள் எல்லாம் செய்பவர் ஆனாலும் அவரால் எதையும் மாற்ற முடியவில்லை. அவரின் இரு குழந்தைகளையும் ஒழுக்கத்துடன் வளர்த்தார். அவருடைய மகன் முருகன் தந்தையின் மனம் கோணாமல் வாழ்வின் உயர்ந்த நிலையை அடைந்து வாழ்ந்து வந்தான். அவருடைய மகள் ரேவதி தன்னுடைய வாழ்க்கைத் துணையை தானே தேர்ந்தெடுத்து ஒழுக்கநெறி தவறி வாழ்வில் உயர்நிலையை அடைய தவறிவிட்டால் அதனால் அவளுடைய வாழ்வு சீரழிந்தது.

தன் மகள் காதலிக்கின்றாள் என்ற செய்தி தெரிந்தவுடன் தன் மகளைக் கூப்பிட்டு பேசினார். **"நான் ஒரு ஹெட்மாஸ்ட்டரு எம்பொண்ணே இப்படி செய்யுதுன்னு தெரிஞ்சா மத்தவங்க என்னெ மதிப்பாங்களா? நீயே எம் பேச்சக் கேக்கல, மதிக்கலன்னா எங்கிட்ட வேல பாக்குற வாத்தியாருங்க, எங்கிட்ட படிக்கிற பசங்க எப்படி எம் பேச்சக் கேப்பாங்க? மதிப்பாங்க? நான் விசாரிச்ச வகையில் அந்தப் பையன் ஒனக்கு ஒத்துவருவான்னு எனக்குத் தோணல. அவனப் பாத்தா நல்ல பையன் மாதிரியும் தெரியல. இத நான் விரோதத்தில் சொல்லல"**[7] (இமையம், செல்லாத பணம் ப.9) என்று தந்தை எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேட்க வில்லை. தன் மகளின் இச்செயலால் மன உளைச்சலுக்கு ஆளானார். தான் கொண்ட அளவற்ற பாசத்தால் மகளின் முடிவினை எதிர்க்க முடியவில்லை. அவளுடைய பிடிவாதமான திருணமத்தி ற்குப் பின் அவள் படும்பாட்டை எண்ணி மிகவும் மணமுடைந்து போனார். அவள் துன்பம் அடையும் போது கொடுக்காத பணத்தை ரேவதி உயிருக்கு போராடி இருக்கும் தருணத்தில் எவ்வளவு பணம் செலவானாலும் என் பிள்ளையை காப்பாற்றுங்கள் என்று வருதப்படும் தந்தையின் மனநிலையை இங்கு காண முடிகின்றது.

### ரேவதி

ரேவதி தனது வர்கத்திற்கும் குறைவான பர்மா அகதியான ரவியை பெற்றோர் கள், உறவினர்கள் எதிர்ப்புகளை மீறி திருமணம் செய்து கொள்கிறாள். திருமணத்திற்கு பின்னர் ரேவதியின் வாழ்க்கையில் ரவி எதற்கும் கட்டுப் படாத ஒழுக்கமற்ற நடத்தையும், அவனது குடிப்பழக்கமும் அவனது ஆணாதிக்க சந்தேக பார்வையும், ஒடுக்குமுறையும் ரேவதியின் வாழ்க்

கையை சீர்குலைக்க ஆரம்பித்தது.

ரவியின் கொடுமைகளும், வறுமையும் பெற்றோர்களின் ஒதுக்குதலும் ரேவதிக்கு வாழ்க்கையில் மிகப்பெரிய வெறுப்பை உண்டாக்குகிறது. தனது பொறியியல் பட்டப்படிப்பு வைத்து நல்ல வேலைக்குச் சென்று தன் கணவனையும் குடும்பத்தையும் காப்பாற்றலாம் என நினைத்த ரேவதியின் கனவு சுக்கு நூறாகின்றது. தனது மகளின் வாழ்க்கை சீர் குலைந்து விட்டதை நினைத்து ரேவதியின் தாய் வருந்துகின்றாள். ரேவதி தன் தாயிடம் கேட்கும் போதெல்லாம் ஏதாவது பண உதவி செய்கிறாள். இரண்டு குழந்தைகளைப் பெற்ற பின்னும் ரவி திருந்த மறுக்கின்றான். தன் அம்மாவிடம் வாங்கி வைத்திருந்த தானுந்து வாகனத்திற்கு கட்ட வேண்டிய தவணைத் தொகையை எடுத்து குடித்துவிட்டு வருகிறான் ரவி.

**“ரவி ராவும் பகலும் சுத்தி சுத்தி வந்து ஒடம்பு பூராவும் அவப்பேரப் பச்ச குத்திக்கிட்டான். நீ இல்லன்னா செத்திடுவன்னு சொல்லி பிளேடால கை காலுல கிழிச்சிக்கிட்டு அவ மனச மாத்திப்புட்டான்”**[8] (இமையம், செல்லாத பணம், ப.48)

ரவி குடித்துவிட்டு அப்பான். **“அவளும் ரெண்டு முறவாணமின்னுட்டு வந்துட்டா, ரெண்டு முறயும் குடிச்சிப்புட்டு வந்து வீட்டு வாசல்ல நின்னுக்கிட்டு அப்பிடிக் கத்துனான் போடான்னாலும் போவல. போல் அக்குப் போவன்ன போனாப்ப பிளேடால கை;காலலெ;லாம் கிழிச்சிக்கிட்டான். செவுத்தில மோதி மண்டய ஒடச்சிக்கிட்டான். சாவப் போறன்னு வெசத்த வாங்கிக்கிட்டு வந்து நின்னான்”**[9] (இமையம், செல்லாத பணம், ப.73) ரேவதியை அடித்து கொடுமைப் படுத்துவான்.

நீ இல்லை என்றால் நான் செத்து விடுவேன் என்ற ரவியின் ஒரு சொல்லிற்கு பின்னரே தன் வாழ்க்கையை அவனுக்கு ஒப்படைத்த ரேவதி. சாகிறாது என்றால் போய் சாவு என்ற ரவியின் ஒற்றைச் சொலைக் கேட்டு செத்து போக முடிவு செய்து தீ குளிக்கின்றாள். பின்னர் சம சதவிகித தீக் காயங்களுடன் ஜிப்மர் மருத்துவ மனையில் தீ விபத்து பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெறுகிறாள். தன் பெற்றோரின் பேச்சைக் கேட்காததால் அவளுடைய வாழ்வு பண்பட்டதாக அமையவில்லை.

தினம்தோறும் அவளுடைய கணவனுடன் வாக்குவாதம், சண்டை அவளுடைய உரிமைகளான புத்தகம் படிக்கும் பழக்கம் கூட மறுக்கப்படுகிறது. வேலைக்கு போக வேண்டும் என்ற ஆசை மறுக்கப்படுதல், அவளுடைய அடிப்படை உரிமைகள் யாவும் மறுக்கப்படுகின்றன. மாறாக கணவனின் வசைப் பேச்சுக்களும், அடி உதைகளையும் பெற்று தீராத மன உளைச்சலுக்கு ஆளாகின்றாள். அவளுடைய ஒழுக்கம் தவறிய செயலாலும் கணவனின் செயல்களாலும் ரேவதி தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள் என்பதை இந்நூல் நமக்கு தெளிவாக உணர்த்துகின்றது.

### ரவி

ரேவதியின் கணவன் ரவி குடிகாரன் தான். ஆட்டோ ஓட்டுபவன் அவன் நிலையில் அவன் சரியாகவே இருக்கின்றான் ரேவதியின் குடும்பத்தில் உள்ளவர்கள் பேசுகின்ற பேச்சுகளின் வழியே நிகழ்த்தப்படுவதால் அவன் ஒரு பொறுக்கி போல் காட்டப்படுகிறான். பொறுக்கியே என்று நாம் உள்வாங்கிக் கொண்டாலும் ஒரு இடத்தில் ரேவதியின் அண்ணியிடம் பேசுவது நிதர்சன பேச்சு. அதில் ரேவதியை கொலை செய்தது நானல்ல. அவர்கள் குடும்பம் தான், அவர்களின் பணம், அந்தஸ்து, செய்த உதாசினம் என்கிறான். தன்னிடம் முகம் கொடுத்து பேசாமல், தன் குழந்தைகளிடம் கொஞ்சி விளையாடாமல் தன் மனைவியை

வாசலிலேயே வைத்து அவமதித்து, தன்னையும் அவமானப் படுத்திய அவர்கள் குடும்பத்தின் மேல் மொத்த பலியையும் போடுகிறான். தொடர்ந்து அவனை நிராகரித்ததால் அவனின் மனதை எப்படியெல்லாம் அளித்து அவனை இன்னும் கீழ்நி;லைக்குத் தள்ளி உள்ளது என்பதை அறிய முடிகிறது.

## சமுதாயத்தில் இன்றைய இளைஞர்கள்

இன்றைய இளைஞர்களிடம் உயர்ந்த இலட்சியங்கள் குறிக்கோள்கள் எதுவும் இல்லை. அற்ப ஆசைகளுக்குப் போட்டி போட்டுக் கொண்டு வாழ்வின் உண்மையை அறிந்து கொள்ள தவறுகின் றார்கள். வாழ்க்கையை வளப்படுத்து வதற்கான எந்த செயல்களும் செய்யாமல் இருக்கின்றனர். இத்தகைய செயல்களால் பல குடும்பங்கள் கடுமையான இன்னல் களுக்கு உட்படுகின்றன. இந்நாவலில் வரும் ரேவதியின் கணவனின் பொறுப் பேற்ற செயல்களால் தன் குழந்தைகளை விட்டு விட்டு மனதை வெறுத்து தீக்குளிக்கின்றாள். இதுபோல சமூகத்தில் இளைஞர்களின் பொறுப்பற்ற செயலால் இன்றைய பெண்கள் துன்பப்படும் நிலையைக் காண முடிகின்றது.

## பணம் செல்லாமல் போகும் இடம்

ரேவதி தீக்குளித்து ஜிப்மர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலை யில் அவளது தந்தையும், அண்ணனும் எவ்வளவு பணம் செலவானால் சரி ரேவதியை உயிருடன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதில் இருவரும் உறுதியாக இருந்தார்கள். ரேவதி உயிருடன் இருக்கும் போதே அவளுடைய அப்பாவும், அண்ணனும் அந்த பணத்தை கொடுத்திருந்தால் அவளுடைய குடும்பமும்; பொருளாதார த்தில் உயர்ந்திருக்கும் அவளுக்கும் அவள் கணவனுக்கும் இடையே எந்த சண்டையும் ஏற்பட்டிருக்காது. அப்படி செய்யாமல் அவள் உயிருக்கு போராடும் நிலையில் எத்தனை இலட்சம் வேண்டுமானாலும் செலவு செய்ய தயாராக இருப்பது பெற்றோருக்கு உயர்ந்த பண்பாகாது. இந்நாவலில் பணம் செல்லாமல் போகும் இடத்தை ஆசிரியர் நன்கு பதிவு செய்துள்ளார்.

## முடிவுரை

செல்லாத பணம் என்ற நாவலில் நல்ல ஒழுக்கமான குடும்பத்தில் பிறந்த ஒரு பெண் நல்ல கல்வியறிவு பெற்றிருந்தா லும் இளம் பருவத்தில் ஏற்படக்கூடிய மன மாற்றத்தால் பெற்றோரின் பேச்சை கேட்காமல் தன் வாழ்க்கை துணையை தானே தேர்ந்தெடுத்து அதனால் அவள் படும் துன்பத்தையும், இன்னல்களையும் நம் கண் முன்னே காட்சிப்படுத்துகிறது. இந்நாவலில் இன்றைய தலைமுறையினர் தன் வாழ்க்கையை தானே முடிவு எடுக்கக் கூடாது

பெற்றோர்களின் சொற்படி நடந்து தன் வாழ்க்கை துணையை அமைத்துக் கொள்வதே சிறந்தது என்பதை இந்நாவலில் இமையம் அழுத்தமாக பதிவு செய்துள்ளதைக் காணமுடிகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. Pillay. K.K. A Social History of the Tamil , Madras University, 1969.
2. அறவாணன், க. ப., தமிழ் இலக்கியச் சமூகவியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை – 1987.
3. அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் மூலமும், அரும்பதவுரையும், உ.வே.சா. நூல் நிலையம், 2008.
4. பாஸ்கல் கில்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், தமிழ் வெளியீட்டுக் கழகம், 1964
5. இமையம், செல்லாத பணம், செல்லப்பன் பதிப்பகம், சென்னை – 600041, முதல் பதிப்பு — 2018